முச்சந்தி முரளி



"சக்கரை இனிக்கிற சக்கரை.. தமிழரசில அமெரிக்காவுக்கு என்ன அக்கறை?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 173

வெள்ளிக்கிழமை
17 மே 2024

வைகாசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# முள்ளிவாய்க்கால் கஞ்சி; தடை நேற்று நீக்கம்!

## ஆனால் கைதானோருக்குப் பிணை இல்லை

**திருகோணமலை, மே 17**

**முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியை வழங்குவதற்கு மூதூர் நீதி மன்றம் முன்னர் வழங்கியிருந்த தடையுத்தரவு நேற்றுத் திரும்பப் பெறப்பட்டுள்ளது.**

11



## பரீட்சை நிறைவுநாளில் பள்ளியில் மரநடுகை!

### கிளிநொச்சி மாணவர்கள் முன்மாதிரி

கிளிநொச்சி, மே 17

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு பாடசாலைகளின் மாணவர்கள், பரீட்சை நிறைவடைந்த பின்னர் சிரமதானம் செய்ததுடன்.

11

## ஆயுத உற்பத்திக்கு தயாராகும் இலங்கை

கொழும்பு, மே 17

இலங்கையில் முதன்முறையாக ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது - என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமீத பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

12

### வடமராட்சி கிழக்கில்

## பெண் கொலை கணவர் கைது!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம், தாளையடியில் பெண்ணொருவர் கழுத்து நெரித்துக் கொலை

11

## உதயனில் இன்று குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்காலில் கொன்றுகுவிக்கப்பட்ட உறவுகளின் நினைவாகவும் அவர்களை அஞ்சலிக்கும் விதமாகவும் உதயன் பணிமனையின் தலைமைக் காரியாலயத்தில் இன்று 17ஆம் திகதி குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

12

## இலங்கை மீனவர்கள் தமிழகத்தில் கைது!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் - வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் தமிழகத்தின் கடலோரக் காவற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12

## இளம் குடும்பப்பெண் மர்ம முறையில் பலி!

### மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மே 17

உணவருந்திவிட்டுப் படுக்கைக்குச் சென்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் படுக்கை

11

## தமிழரசின் பிளவு கவலை தருகிறது

### அமெரிக்கத் தூதுவர் கருத்து

கொழும்பு, மே 17

தமிழ் மக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக நிற்கவேண்டிய தருணத்தில், தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி பதவிசார் பிரச்சினைகளால் வழக்குகளைச் சந்தித்து பிளவுபட்டு நிற்பது கவலையைத் தருகின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

11

### கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## ஜூலை 4ஆம் திகதி மீண்டும் அகழ்வுகள்!

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுப் பணிகள், ஜூலை 4ஆம் திகதி மீள இடம்பெறுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கொக்குத்

11

## பொதுத்தேர்தலே முதல் நடக்குமாம்

கொழும்பு, மே 17

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலே நடத்தப்படும் என்பதை மீண்டும் உறுதியாகக் கூறுகின்றேன் என்று ராஜபக்ச குடும்ப உறுப்பினரும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

11

## ஒக்ரோபர் முதல்வாரம் ஜனாதிபதித் தேர்தல்!

### ஆசு மாரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 17

ஒக்ரோபர் முதல்வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில்

11

## மே 20 வரை கனமழை!

யாழ்ப்பாணம், மே 17

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 20ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது என்று

11

## வடக்குக்கு மீண்டும் வருகின்றார் ரணில்!

யாழ்ப்பாணம், மே 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 24ஆம் திகதி வடக்குக்கு மீண்டும் வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் இடம்பெறும் திறப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி, திறப்பு

11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலையை தலைமுறைகளுக்குக் கடத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது. (ப)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, உழவனூர் இளைஞர்களின் ஏற்பாட்டில் உழவனூர்ப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கப்பட்டது. (எ-113)

# இலங்கையில் தமிழர்களுக்கு தற்போதும் பாதுகாப்பில்லை



## டேவிட் சூபிரிட்ஜ் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 17

**இலங்கையில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இன்றுவரை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர் பதவிகளில் உள்ளனர். தற்போதும் தமிழர்கள் இலங்கையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் ஒடுக்குமுறையை எதிர்கொள்கின்றனர்.**

- இவ்வாறு அவுஸ்திரேலியாவின் கிறீன்ஸ் கட்சியின் செனெட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இறுதிப் போரின்போது சர்வதேசரீதியில் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் அல்லது யுத்த சூனிய வலயம் தாக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பலர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் இருந்தவர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் இன்றும் இலங்கை இராணுவத்திலும் அரசாங்கத்திலும் உயர் பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றனர். இலங்கையில் ஒடுக்குமுறையை அனுபவிக்கும் தமிழர்களில் பலர் அவுஸ்திரேலியா உட்படப் பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். எங்கள் தேசம் தனது இதயத்தை அவர்களுக்காக திறக்கவேண்டும். அவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பை வழங்க வேண்டும் - என்றார். (எ-இ)

### குடிதண்ணீருக்குப் பயன்படுத்தப்படும்

# கிளி. குளத்து நீரில் மாசு தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, மே 17

மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் கிளிநொச்சிக்குளம் மாசடைவது நிரூபிக்கப்படின் இதுவரை மக்கள் பயன்படுத்திய குடிதண்ணீர் தொடர்பில் பொதுநல வழக்கு தொடரப்படவேண்டும் என்று இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் குளமாக கிளிநொச்சிக் குளம் விளங்குகிறது.

மருத்துவக் கழிவுப்பொருள்கள் உள்ளிட்ட நகரக் கழிவுகள் இந்தக் குளத்தில் கொட்டப்படுவதால் குளம் மாசடைகிறது. இதனால் நீர் சுத்திகரிப்புப் பணியில் சிரமம் உண்டாவதால் அதிக குளோரின் பாவிக்கப்படுவதை உணரமுடிகிறது. இது பாரதூரமான விடயம் என்பதால் பொது நல வழக்குத் தொடரவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில்,

கிளிநொச்சிக் குளத்தை மாசுபடுத்த விடமுடியாது.

ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வரவுள்ள நிலையில் இந்தத் திட்டத்துக்கான நிதியைப் பெறுவது தொடர்பில் கலந்துரையாடுவோம். அதுவரை சுத்தமான குடிதண்ணீரை வழங்கக்கூடிய மாற்றுப் பகுதியை அடையாளம் காண நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ச-113)

# தும்பு ஆலையில் தீ விபத்து

யாழ்ப்பாணம், மே 17

பளை இந்திராபுரம் சந்திக்கு அருகில் உள்ள தனியார் தும்பு உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பெருமளவு தும்புக் குவியல்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அதேவேளை, ஆலையில் கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டிருந்தது. (எ-9)

# சிறுவர் துஷ்பிரயோகம் அமெரிக்கா விசாரணை

கொழும்பு, மே 17

இலங்கையில் சிறுவர்களின் ஆபாசமான புகைப்படங்களை உருவாக்கி இணையத்தில் வெளியிடும் செயற்பாட்டில் குழு ஒன்று ஈடுபடுவது தொடர்பான தகவல் வெளியாகியுள்ள நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த காணாமற் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளான குழந்தைகளுக்கான தேசிய மையம் விசாரணையை ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பணியகம், கொழும்பு மேலதிக நீதிவான் தெமிந்த பெரோவிடம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும் இந்த நிறுவனத்தால் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சமந்தி ரேணுகா நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான சிறுவர்கள் மற்றும் புகைப்படங்களை உருவாக்கிய சந்தேகநபர்கள் தொடர்பில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்படும் எனவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# எலுமிச்சை 3,000 ரூபா!

கொழும்பு,மே. 14

தம்புள்ள உள்ளிட்ட பல பிரதேசங்களில் ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் சில்லறை விலை 3000 ரூபாவாக உயர்ந்துள்ளது. தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஊவா மாகாணத்தில் இருந்து எலுமிச்சை விநியோகம் செய்யப்படுகிறது.

போதியளவு எலுமிச்சை கிடைக்காத காரணத்தால் இந்த நாள்களில் எலுமிச்சையின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் எகிறியுள்ளன என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மின்கட்டணக் குறைப்பு வீதம் ஜூலை மாதம் வெளியாகும்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மே 17

மின்சாரக் கட்டணக் குறைப்பு சதவீதம் எதிர்வரும் ஜூலை மாதம் அறிவிக்கப்படும்எனப்பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது. முன்மொழிவுகள் கிடைத்தவுடன் மின்கட்டணத்தை குறைக்கும் நடவடிக்கை தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனைகளை சமர்ப்பிக்க இன்றுவரை கால அவகாசம் வழங்கவேண்டும் என்று மின்சாரசபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.


இந்த முன்மொழிவுகள் ஆணைக்குழுவிடம் கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டவிருந்த நிலையில், மின்சாரசபையின் கோரிக்கைக்கு அமைய பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கடந்த 10ஆம் திகதிவரை கால அவகாசத்தை நீடித்துள்ளது. ஆயினும் கடந்த 10 ஆம் திகதி முன்மொழிவுகளை இலங்கை மின்சாரசபை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நானாட்டான் பஸ் நிலையப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நேற்று வியாழக்கிழமை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. (எ-213)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தவறான தகவல்களால் நாட்டுக்குச் சீரழிவாம்!



## ஜனாதிபதி ரணில் விசனம்

கொழும்பு, மே 17

**நாடாளுமன்றம் கலைக்கப்படும் என சிலர் பரப்பும் தவறான தகவல்களால் அதற்கு அடுத்த நாள் பங்குச் சந்தை வீழ்ச்சியடைகிறது. அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

"ஒரு நாடு என்ற சர்வதேச அங்கீகாரம் சட்டக் கட்டமைப்பின் செயற்பாட்டில் அடங்கியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. தெற்காசியாவில் புதிய சட்டங்களைச் செயற்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது. நாட்டில் தற்போது புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சாட்டுகின்றனர். திருடர்களைப் பிடிக்க இந்த அரசாங்கமே சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வேட்புமனு இரத்து சாத்தியமற்றது

*மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு*



உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் நடைமுறை தற்போது சாத்தியமற்றது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே நாடாளுமன்ற சட்டம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலுக்குப் பின்னர் இதுபோன்ற விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்று மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# விஜயதாஸவுக்குத் தடை நீதிமன்று நிராகரிப்பு!

கொழும்பு, மே 17

விஜயதாஸ ராஜபக்ச மற்றும் கீர்த்தி உடவத்த ஆகியோரின் நியமனங்களுக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்குமாறு முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக விஜயதாஸ ராஜபக்சவையும், பதில் செயலாளராக கீர்த்தி உடவத்தவையும் நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் கட்சியின் அமைப்புகள் மற்றும் அதிகாரிகள் செயற்படுவதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவால் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டது. முன்வைக்கப்பட்ட குறித்த கோரிக்கையை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளது. (ச-இ)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் இம்மாதம்

கொழும்பு, மே 17

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இந்த மாதத்துக்குள் வெளியிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# போரில் இராணுவத்தினர்; ஆராய ரஷ்யாவுக்கு குழு

கொழும்பு, மே 17

ரஷ்ய - உக்ரைன் போரில் இராணுவ நடவடிக்கைகளுக்காக இலங்கையின் ஓய்வு பெற்ற படையினரை ஆட்சேர்க்கும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை ரஷ்யாவுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்பு அமைச்சு அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 10 . 1938



மறைவு
15 . 05 . 2024

## M.T.ஞானப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற Deputy Principal - மானிப்பாய் மகளிர் கல்லூரி)

நவாலி தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி M.T. ஞானப்பிரகாசம் நேற்று முன்தினம் (15.05.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற M.D. ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் துணைவியாரும், காலம்சென்ற லூர்து மேரி, மற்றும் எலிசபேத்தம்மா, ஜேசுதாசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெகான், ஜேயந்தன், ரஞ்சன், ஜனனி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷாந்தி, சத்யா, நதினி, கமலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், றிஷோன், ரேஷா, மலிஷா, அனிஷா, ஹரன், திவ்யா, பரன், ஹமிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.05.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (18.05.2024) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் Navaly St. Peter's தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு Navaly St. Peter's மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
070 237 6643

(CS/55091) J-1


# தினம் தெரியுமோ?

**தி**ண்ணையில படுத்திருந்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணம் மாதிரி, எப்பெப்ப என்னென்ன வேலைத் திட்டங்கள் எங்களைச் சுத்தி நடக்குதெண்டே தெரியாமல் இருக்குது. இரவு நித்திரை கொண்டிட்டு விடிய எழும்பி றோட்டுக்கு வந்த பிறகுதான் றோட்டில ஏதோ கிடங்குகிண்டி வேலை நடந்திருக்குது எண்டு தெரியுது. யாழ்ப்பாணம் ரவுணை அண்டின இடங்களில சனநடமாட்டம் கூட எண்டதால, அதைக் குழப்பாமல் இரவிரவாத் தான் றோட்டு வேலை, வடிகால் வேலை, ரெலிபோன் லைன் வேலை, பைப் லைன் வேலை எல்லாம் நடக்கும். இப்ப பைப் லைன் சீசன். இரவில யாழ்ப்பாணம் ரவுணில இருந்து நல்லூர் வரைக்கும் எங்கையாவது ஒரு றோட்டிலை லைட் பூட்டி வேலை நடந்துகொண்டிருக்கும். ஆளில்லாக் கடையில ரீ ஆத்துற மாதிரி, இன்னும்குடிதண்ணிஎங்கஇருந்துவரப்போகுதெண்டே ஒழுங்கான முடிவெடுக்காட்டியும், எல்லா இடமும் பைப் தாட்டு முடிக்கோணும் எண்டதில எங்கட ஆக்கள் குறியா இருக்கினம். இரவெண்டும் பாராமல் சனத்தைக் குழப்பாமல் உந்த வேலையைச் செய்யிறவையை ஒருபக்கம் பாராட்டினாலும், இன்னொரு பக்கம் விடியிறதுக்குள்ள வேலையை முடிக்கோணும் எண்ட அந்தரத்தில அவை விடுகிற சின்னச் சின்ன பிழையள் பெரிய ஆபத்தை கொண்டு வாறதையும் சொல்லத்தான் வேணும்.

யாழ்ப்பாணம் ரவுணுக்கு கிட்டவுள்ள திருநெல்வேலி, மாரியம்மன் லேனில, முந்தநாள் பெய்த மழையால, உந்தப் பைப் தாட்ட இடங்களில வெள்ளம் நிரவிப்போய் நிண்டது. வெள்ளம் எது, பள்ளம் எதுவெண்டு ஆரும் கண்டுபிடிக்க ஏலாது. வீடுகளுக்கு முன்னால பைப் தாட்டால் அதை மூடிப்போட்டுத்தான் போறவை. அதால பயமில்லை எண்டு நினைச்சு, மோட்டர் சைக்கிளை உருட்டிக் கொண்டந்த ஒராள் ஒழுங்கையையும், றோட்டையும் பிரிச்சபடி கிடந்த வெள்ளத்தை தாண்டுவமெண்டு காலை எட்டி வைச்சிருக்கிறார். அவ்வளவுதான், மெல்லத் திறந்தது கதவு படத்தில வாற அமலா மாதிரி, ஆள் அந்த வெள்ளத்துக்க புதையத் தொடங்கிட்டுது. விடியக் காலைமை எண்டதால பெரிசா சனப்புழக்கமும் இல்லை. முழங்கால் மட்டும் ஆள் தாண்டிட்டார். விட்டால் முழுசாப் புதைஞ்சு போடுவனோ எண்டு அவருக்குப் பயம் வந்திட்டு. ஆனால் நல்ல வேளையா அந்த றோட்டால போன இன்னொரு ஆள் வந்து ஒருமாதிரி அவரை அந்த வெள்ளமும் சேறுமாக் கிடந்த பள்ளத்துக்க இருந்து வெளியில இழுத்தெடுத்திட்டார். சரி எண்டு தன்னைத் தானே தேத்திக்கொண்டு நொண்டி நொண்டி அவர், விழுந்து கிடந்த மோட்டர் சைக்கிளை எடுத்துக்கொண்டு போட்டார்.

அந்த பைப்பை தாட்டவை ஒழுங்கா மூடியிருந்தால், இப்பிடி புதைஞ்சிருக்க வேண்டியிருக்காதே. கடமைக்கு மண்ணை அள்ளி மேலால தூவிப்போட்டுப் போனால் தான் இப்பிடி நடக்கும். ஒருவேளை அந்தாள் மோட்டர் சைக்கிளை உருட்டாமல் ஓடிக்கொண்டு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும். அதைவிடுவம், ஆரும் சின்னப்பிள்ளையள் இப்பிடி ஒரு ஆபத்து இருக்கெண்டு தெரியாமல் வந்திருந்தால் கதை முடிஞ்சிருக்குமே. ஒருவேலையைச் செய்தால், அதால என்ன பாதிப்பு வருமெண்டு யோசிச்சு, அதுக்கேத்தபடி செய்யோணும். சிலவேளையளில நேரம் பத்தாமல், சரியாக் கிடங்கை மூட ஏலாட்டி, அந்தக் கிடங்குகளை அடையாளப்படுத்தி ஏதாவது அறிவிப்புப்பலகையை வைச்சால், சனம் கொஞ்சம் விலத்திப் போகுமெல்லோ? செய்வன திருந்தச் செய்யெண்டு எங்கட ஆக்கள் சும்மா சொல்லேலையே.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள்
## (2024 - 2025)

ஊரே கூடி நின்று ஒரு கருத்தைச் சொன்னாலும் தனக்கெனத் தனிக்கருத்து உடையவர்கள் கும்பராசிக்காரர்கள். இவர்களுக்குள் ஆயிரம் ரகசியங்கள் ஒளிந்துகிடக்கும். எளிதாக யாரும் அதை அறிந்துகொண்டுவிட முடியாது. அவிட்டம் 3ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் வரையிலான நட்சத்திரங்களைத் தன்னகத்தே கொண்ட கும்பராசிக்காரர்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி எப்படி அமையும் என்பதைக் காண்போம்.




இதுவரை முயற்சி வீடான மூன்றாம் வீட்டில் அமர்ந்துகொண்டு, உங்களை முடக்கிவைத்த குருபகவான் இப்போது 1.5.24 முதல் 14.5.25 வரை நான்காவது வீட்டில் அமர்வதால் நீங்கள் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கவேண்டும். உங்கள் ராசிக்கு 2 மற்றும் 11 ஆம் வீட்டிற்குரிய கிரகம் குருபகவான் என்பதால் தீயபலன்கள் குறையும். என்றாலும் அலைச்சல் இருக்கும். சேமிப்புகள் கரையும். உங்களின் 10ஆம் வீட்டை குரு பார்ப்பதால் உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். புது வாகனம் வாங்குவீர்கள். எந்தப் பிரச்சினைக்காகவும் நீதிமன்றம் போகாமல் இலாபமோ நஷ்டமோ பேசித் தீர்த்துக்கொள்ளப் பாருங்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

1.5.24 முதல் 12.6.24 வரை சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் வாழ்க்கைத்துணையின் உடல்நிலையில் அக்கறை தேவை. உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும். அரசு காரியங்களில் அலட்சியம் வேண்டாம்.

12.6.24 முதல் 19.8.24 வரை மற்றும் 2.12.24 முதல் 5.4.25 வரை சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் செலவுகள் கூடிக்கொண்டே போகும். சின்னச் சின்ன விபத்துகள் ஏற்படக்கூடும். குறுக்குவழியில் செல்லவேண்டாம்.

19.8.2024 முதல் 2.12.2024 வரை மற்றும் 5.4.2025 முதல் 14.5.2025 வரை செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் இளைய சகோதர வகையில் உதவியுண்டு. சொத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

**வியாபாரம் :** தொழிலை விரிவுபடுத்தலாம். இலாபம் குறையாது.

**உத்தியோகம் :** வேலைச்சுமை இருக்கும். உங்களுக்கு எதிராகச் சிலர் குற்றச்சாட்டுகளை வைப்பார்கள். மேலதிகாரியிடம் மனஸ்தாபங்கள் வெடிக்கும். பணியில் திடீர் இடமாற்றம் உண்டு. குருபகவான் 10 ஆம் வீட்டைப் பார்ப்பதால் சவால்களைச் சமாளிப்பீர்கள்.

**இந்தக் குரு மாற்றம் உங்களைச் சிலநேரங்களில் அலைக்கழித்தாலும், இறுதியில் நினைத்ததை முடிக்கும் வல்லமையைத் தரும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைத்து மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர் பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனஸ்தாபங்கள் நீங்கும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். கனிவான அணுகுமுறை அவசியம். சிவபெருமானை வழிபட காரியங்கள் சாதகமாக முடியும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது. காரியம் இழுபறியாகும். ஆஞ்சநேயரை வழிபட மன அமைதி உண்டாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம். செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத செலவுகளால் சஞ்சலம் ஏற்படும்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**மகரம்:** பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். இன்று நன்மைகள் அதிகரிக்க தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.



## கிளி. சாரணிய ஆணையாளராக சி.விக்கினேஸ்வரன் நியமனம்

கிளிநாச்சி, மே 17

கிளிநொச்சி மாவட்டத்தின் சாரண ஆணையாளராகக் கடமையாற்றிய மு.பிரேம்குமார் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, புதிய மாவட்ட சாரண ஆணையாளராக சி.விக்கினேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரித் பெர்னாண்டோ நியமனக் கடிதத்தை நேற்று வியாழக்கிழமை வழங்கினார். சி.விக்கினேஸ்வரன் பளை மத்திய கல்லூரியில் சிறந்த சாரணராகச் சேவையாற்றி, ஜனாதிபதி விருதைப் பெற்றவர். (எ-27)



யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜெயசிங்க, யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்டத்தின் அண்மைக்கால நிலைவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 17

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் (ஊர்உலா) மறுநாள் சனிக்கிழமை வேள்வித் திருவிழாவும், கொடிபிறக்கமும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கற்றுக்கொள்வார்களா ஆசிரியர்கள்?

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நேற்றுமுன்தினம் புதன்கிழமையோடு நிறைவுக்கு வந்திருக்கிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில என்பதைப்போல அண்மைக்காலமாக இத்தகைய பொதுப்பரீட்சைகளின் புதியதொரு பழக்கம் மாணவரிடையே அதிவேகமாகத் தொற்றியுள்ளது. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளின் இறுதி நாளன்று ஆளுக்கு ஆள் மை தெளித்தல் என்று தொடங்கிய இந்தப் புதிய பழக்கம் இப்போது பாடசாலைத் தளபாடங்களை அடித்து நொருக்குவதில் வந்துநிற்கின்றது. பரீட்சைக்குத் தயாராகியதால் ஏற்பட்ட மன அழுத்தத்தைக் குறைக்கவே இப்படியான செயல்களில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. அப்படி பரீட்சையாலும், அதற்கான கற்றலாலும் ஏற்பட்ட அழுத்தத்துக்கான ஒரு நிவாரணியாக குறைந்தபட்சம் மாணவர்கள் தமக்கிடையே எல்லை மீறாத வகையில் மை தெளித்து விளையாடுவதை ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில் பரீட்சை என்ற பாறாங்கல் இனி மிக நீண்டகாலத்துக்கு இல்லை என்ற மகிழ்வை மை தெளித்துக் கொண்டாடுவதால் பாரதூரமான பாதிப்புகள் நிகழப்போவதில்லை. ஆனால், அதன் அடுத்தகட்டமாக, அவர்களுக்கு இத்தனை நாளும் கல்விச்செல்வத்தை ஊட்டி வளர்த்த பாடசாலைத்தளபாடங்களை அடித்து நொருக்குதல் என்பதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளமுடியாது. இத்தகைய செயல்களே எதிர்காலத்தில் அந்த மாணவர்களை வன்முறையில் மட்டுமே நம்பிக்கை கொண்ட சமூகமாக மாற்றக்கூடியவை. இருப்பினும் பல பாடசாலைகளில் மாணவர்களின் இத்தகைய எல்லைமீறல்களை தடுக்க முடியாதவர்களாகப் பாடசாலைச் சமூகத்தினர் இருப்பதையும் காணமுடிகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த இரு பாடசாலைகளின் மாணவர்கள் முன்மாதிரியான வகையில், தங்கள் பரீட்சையின் இறுதி நாளை கொண்டாடியிருக்கிறார்கள். அவர்கள் மை தெளித்து அடுத்தவர் ஆடைகளை அலங்கோலம் செய்யவில்லை, பாடசாலை மேசை, கதிரைகளை அடித்து நொருக்கவில்லை, தண்ணீர்க்குழாய்களைப் பிடுங்கி எறியவில்லை, ஆசிரியர்களின் வாகனங்களுக்கு ஊறு விளைவிக்கவில்லை. மாறாக அவர்கள் தங்களை இத்தனை நாளும் கல்வியெனும் நிழல் தந்து காத்த பாடசாலைச் சூழலை சிரமதானம் மூலம் சுத்தமாக்கினர், தங்கள் பள்ளிக்காலத்தை எக்காலமும் நினைவூட்டும் வகையில் மரக்கன்றுகளை நட்டனர். சமூகப்பெறுமதி மிக்க, மற்றவர்களுக்கு முன்னுதாரணமான இந்த நற்செயலை கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயம் மற்றும் செல்வா நகர் அ.த.க. பாடசாலை மாணவர்களே செய்துகாட்டியுள்ளனர். இந்தச் சிந்தனை குறித்த பாடசாலை மாணவர்கள் எல்லோருக்கும் ஒரேசமயத்தில் வந்திருப்பதால் அது இயல்பாக நிகழவில்லை, அவர்களை அப்படியான சமூகப்பெறுமதியான முடிவுகளை எடுக்குமளவுக்கு குறித்த பாடசாலைச் சமூகமே வழிகாட்டியிருக்கிறது. கற்றதனால் ஆய பயன் என்னவென்பதை வெறுமனே பரீட்சை வழியிலான ஏட்டுக்கல்வி மூலம் மட்டும் புகட்டாமல், அவர்களைச் செயற்பாட்டுரீதியாகவும் சமூகப்பயனுள்ளவர்களாக மாற்றியமைக்காக அந்தப்பாடசாலைகளின் அதிபர்களையும், ஆசிரியர்களையும் ஏனைய பாடசாலைகள் ஒரு முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.

ஒருவன் நல்லவனாவதும், தீயவனாவதும் தனியே அன்னை, தந்தை வளர்ப்பில் மட்டுமே தங்கியிருக்கவில்லை. ஆசிரியர்களின் வழிகாட்டலே ஒரு பிள்ளையின் எதிர்காலத்தைப் பெரிதும் தீர்மானிக்கின்றது. சிறுவயதில் இருந்தே மாணவர்களுக்குச் சரியான விடயங்களைப் போதித்து, வழிகாட்டுவதனூடாக அந்த மாணவனின் நடத்தையை சரியான் வழியில் திசைப்படுத்தும் கடமை ஆசிரியர்களுக்கும், பாடசாலைச் சமூகத்துக்குரியதே. ஆனால், இப்போதைய அவசர உலகில அந்தக் கடமையை பாடசாலைச் சமூகம் மறந்துவிட்டு, வெறுமனே பரீட்சைமையக் கல்வியை மட்டுமே முதன்மையாகக் கொள்வதால் மாணவர்களின் உளப்பாங்குகள் சரியான வழியில் பயணிக்கின்றனவா என்பதைக் கணிக்கத் தவறிவிடுகின்றனர். அதன் விளைவுகளே, பரீட்சை முடிந்தவுடன் பாடசாலைத் தளபாடங்கள், பொருட்களை அடித்து நொருக்குதல்,அடுத்தவர் ஆடைகளில் மைதெளித்தல் போன்றன. ஆக, தவறு மாணவர்களில் என்று பழியைப் போடுவதை விடுத்து, அவர்களைப் பொறுப்பான, சமூகப் பெறுமதி மிக்க, முன்னு தாரண மாந்தர்களாக மாற்றுவது பாடசாலைச் சமூகத்தின் கடமை. அந்தக் கடமையை எவ்வாறு செயற்படுத்த வேண்டுமென்பதை கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயம் மற்றும் செல்வாநகர் அ.த.க. பாடசாலைகளிடம் இருந்து ஏனைய பாடசாலைச் சமூகங்கள் கற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.



# இரு ஆண்டுகளில் 75 புதிய சட்டங்கள்



**கொழும்பு, மே 17**

**கடந்த இரு ஆண்டுகளில் அரசாங்கம் 75 புதிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தெல்தெனிய நீதிமன்ற வளாகத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெற்காசியாவில் புதிய சட்ட முறைமைகளைச் செயற்படுத்தும் ஒரே நாடு இலங்கை.

ஊழலை ஒழிப்பதற்குப் பல புரட்சிகரமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம். அரசாங்கம் திருடர்களைப் பாதுகாக்கின்றது என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் திருடர்களைப் பிடிப்பதற்காக அரசாங்கம் பல புதிய சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

ஊழலை ஒழிப்போம் என்பதை அரசியல் கோஷமாகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும்.

புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (அ- எ-இ)

## அரசசார்பற்ற நிறுவனப் பதிவு அமெரிக்காவும் பரிந்துரைகள்

கொழும்பு, மே 17

அரசசார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்வது தொடர்பான சட்டவரைபில் அமெரிக்காவும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது. "அரசசார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்தல் மேற்பார்வை செய்தல்" சட்டம் தற்போது சட்டமா அதிபரின் பரிந்துரைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஒன்றுகூடல் விடயத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க இராஜாங்க செயலர் டொனால்ட் லு திருத்தங்களை மேற்கொண்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-6)

## உக்ரைன் மோதலில் 16 இலங்கையர் உயிரிழப்பு

ரஷ்யா- உக்ரைன் மோதலில் இலங்கையின் ஓய்வுபெற்ற 16 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

கூலிப்படையாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஓய்வு பெற்ற இராணுவத்தினரை நாட்டுக்கு அழைத்துவரத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஆடைத்துறையில் சீனா முதலீடு

இலங்கையின் ஆடைத்தொழில்துறையில் சீனாவின் முதலீடுகள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சீனாவின் தேசிய ஆடைத்தொழில்துறை சங்க உறுப்பினர்கள் 30 பேர் இலங்கையில் உள்ள 12 முன்னணி ஆடை நிறுவனங்களுடன் சந்திப்புகளை நடத்தியுள்ளனர். (ச-இ)

## இந்தோனேஷியா செல்லும் ரணில்!

கொழும்பு, மே 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தோனேஷியா செல்லவுள்ளார்.

இந்தோனேஷிய ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்றும், அங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உலக நீர் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-44)

**நாளை**

18.05.2024

**சனிக்கிழமை**

**வைகாசி - 05**

சுபநேரம் : 02.53 - 04.23

ராகுகாலம் : 08.53 - 10:23

**நாளொரு நல்வார்த்தை**

**தான் இளைப்பாற முடியாது
எனத் தெரிந்தும் நிழலுக்காக
மரம் வைப்பவனே
வாழ்வை உணர்ந்தவன்**

**-ரவீந்திரநாத் தாகூர்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உரிமை பறிப்பு சர்வதேசமே தலையிடுக!

## கிழக்குப் பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

**திருகோணமலை, மே 17**

**போர் நிறைவுற்று 15 ஆண்டுகள் கழிந்தும் நீதி வழங்கப்படாத நிலையில் தமிழரின் உரிமைகள் இலங்கை அரசினாலும் அதன் ஆதரவில் இருக்கும் பெரும்பான்மைச் சமூகத்தினாலும் தொடர்ந்தும் மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வருகின்றன. தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைக்கூட மறுக்கும் இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும்.**


-இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

திருகோணமலை சேனையூர்ப் பகுதியில் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூர்ந்தவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அநாகரீகமான முறையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கைப் பொலிஸாரின் இந்த அத்துமீறல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அடாத்தாக கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

உரிமையை வேண்டிப் போராடிய ஓர் இனத்தின்மீது இலங்கை அரசால் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய இனவழிப்பினால் இறுதி எட்டு மாதங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டனர். இந்த நிலையில் இலங்கை அரசினாலும் அரச படைகளாலும் கொன்று குவிக்கப்பட்ட எமதுமக்களைநினைவுகூரும் உரிமையிலும் இலங்கை அரசாங்கம் கைவைத்துள்ளது.

தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைக்கூட மறுக்கும் இலங்கை அரசை சர்வதேசம் கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அழுத்தம் வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ச)



முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவுகூரும் முகமாக, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால், பல்கலைக்கழக விஞ்ஞானபீட நுழைவாயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (ப-27)

# ஒழுங்குமுறைக்குள் முன்பள்ளிகள்

கொழும்பு, மே 17

நாடளாவிய ரீதியில் செயற்படும் 18 ஆயிரம் முன்பள்ளிப் பாடசாலைகளை முறைப்படுத்தி ஆசிரியர் களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுக்கு மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையான காலத்திலேயே மூளை வளர்ச்சி ஏற்படுகின்றது. எமது நாடுகள் போல அன்றி அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் இந்த முன்பள்ளி விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

அந்த வகையில் நாமும் தற்போது முதல் கட்ட பயிலுநர்களைத் தெரிவு செய்துள்ளோம். எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் தவணை பாடசாலைகள் ஆரம்பமாகும்போது அவர்கள் அனைவருக்கும் பயிற்சி வழங்குவோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# எழுத்தாளர் ஊக்குவிப்பு; ஆளுநருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 17

தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய, வட மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட குழுவினர், ஆளுநரின் உதவிச் செயலாளர், உள்ளூராட்சித் திணைக்களப் பணிப்பாளர், மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.


இதன்போது உள்ளூராட்சி அமைப்புகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்தித் திணைக்களங்கள் ஆகியன தம்மிடமுள்ள நிதியில் குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், திறந்தவெளி அரங்குகளில் உள்ளூர்க் கலைகளை மேடையேற்றி அவற்றை அழிந்திடாமல் பாதுகாத்து புத்துயிர் வழங்க மாகாண கலாசாரத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (ஒ-66)

# வீதியோரக் குப்பை பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், மே 17

காக்கைதீவு மீன்சந்தையில் இருந்து சுமார் 150 மீற்றர் தொலைவிலுள்ள வீதியோரத்தில் கழிவுப்பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. இதனால் வீதியில் பயணம் செய்கின்றவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வீட்டுக்கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப் பொருள்களை வீதியோரங்களில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். அங்கு வந்த யாழ். மாநகரசபை ஊழியர்கள் அவ்விடத்தில் வைத்தே கழிவுப் பொருள்கள் மீது தீமூட்டியுள்ளனர். இதனால் வளி மாசடைவதுடன் வீதியால் செல்கின்ற பயணிகள் சுவாசப்பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். (ஒ-27)



# மழையால் தேங்கிய பிளாஸ்ரிக்கழிவுகள்!

வவுனியா, மே 17

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக, வீதியோரங்களில் வீசப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பொருள்கள், மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டு கால்வாய்களில் தேங்கிக் காணப்பட்டன. (ப-110)



# மயிலங்காடுச் சந்தையருகே மீன், மரக்கறி விற்கத் தடை!

## வலிகாமம் தெற்குப் பிரதேசசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உபஅலுவலக எல்லைக்குட்பட்ட மயிலங்காடு சந்தையிலிருந்து 500 மீற்றருக்குட்பட்ட பகுதிகளில் மீன், மரக்கறி, இறைச்சி மற்றும் தேங்காய் விற்பனை செய்வதற்கு வலி.தெற்குப் பிரதேசசபையால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை கடந்த திங்கட்கிழமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வலி.தெற்குப் பிரதேசசபையின் மூலம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுக் குறித்த பகுதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க 16 வது வருடாந்த பொதுக்கூட்டம்

மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க 16வது வருடாந்த பொதுக்கூட்டம் 02.06.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்திய கலாநிதி சு.சிவபாதமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து தங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல் :**

1. மங்கல விளக்கேற்றல்
2. வரவேற்புரை / தலைமையுரை
3. 15 வது பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
4. 01.05.2023 தொடக்கம் 31.05.2024 வரையான செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்
5. 2023ம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
6. ஏனைய விடயங்கள்
7. நன்றியுரை

**சுஜீவா சிவதாஸ்**
**செயலாளர்**

**47/1 ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(CS/55082) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவிலுக்கும் இடையில் பலாலி வீதியில் கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. அப்பையில் தில்லைநாதன் சிவரூபன் என்பவரின் கடவுச்சீட்டு உள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 674 5885**

(CS/55083) J-1

## 11 ஆவது ஆண்டு நினைவலைகள்



வித்தாய் 31 • 07 • 1974

வேராய் 20 • 05 • 2013

**அமரர் மதியாபரணம் மதிவதனன்**

(கரைதுறைப்பற்று பிரதேச சபை)

பாசம் பலவகை வேசமில்லா பாசம் உயர்வகை
அதில் தந்தை மகள் பாசம் தனிவகை தந்தைப்
பாசமொன்று சாகரத்தில் முழ்கவைத்து சந்தோசத்தில்
மகிழ வைக்கும் உற்சாக உறவு அப்பா ஆண்டுகள்
பதினொன்று ஆனாலும் எப்போதும் உங்கள்
அன்பு முகம் மறவாதே அப்பா!

**37/37 இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மனைவி, மகள்,**
**அக்கா, அத்தான், மருமக்கள்.**

(CS/55086) J-1

# இந்திய மீனவர்கள் மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பகுதியில் படகொன்றில் கரை ஒதுங்கிய இந்தியாவின் தமிழக மீனவர்கள் மூவர் இளவாலைப் பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல்- புளியந்தரைக் கடற்கரைப் பகுதியில் படகொன்று மூன்று மீனவர்களுடன் கரை ஒதுங்கிய நிலையில் அவர்களை அந்தப் பகுதி மீனவர்கள் மீட்டதுடன் இதுதொடர்பாக இளவாலைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். இதற்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலைப் பொலிஸார் தமிழக கடற்றொழிலாளர்கள் மூவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவர்களைக் கைது செய்தனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின்போது படகு பழுதடைந்தமையாலேயே கரை ஒதுங்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-66)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

பிறப்பு 04 • 01 • 1958



இறப்பு 15 • 04 • 2024

**அமரர் வீரகத்தி குமரகுருபரன்**

**(குமரன். பரம், முன்னாள் நூலகர் பிரதேசசபை ஊர்காவற்றுறை, முன்னாள் பிரபல கணித பாட ஆசிரியர் யாழ், கொழும்பு)**

கடந்த 15.04.2024 அன்று இத்தாலி நாப்போலியில் இறைபதமடைந்த செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் துன்பத்தில் பங்கு பற்றியோருக்கும் அஞ்சலி நிகழ்வை ஒழுங்கு செய்து நடாத்திய ஊரோடு உறவாட (நாரந்தனை உறவுகள்) அமைப்புக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நாளை (18.05.2024) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

**பெறாமக்கள்**
077 860 2017

(CS/55090) J-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 18.04.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**பொன்னம்பலம் பாலசந்திரன் (தேவன்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (16.05.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு 6ம் வட்டாரம் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (18.05.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**582/25 செபஸ்தியார்,**
**[illegible] வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**மனைவி**

(CS/55092) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்பு நேற்றும் உணர்வுபூர்வம்



யாழ்ப்பாணம், மே 17

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் ஒழுங்கமைப்பில் நேற்றுப் பல பகுதிகளில் முள்ளிவாய்க்கால் அஞ்சலிப்பும் கஞ்சி வழங்கலும் இடம்பெற்றது.

பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் உபதலைவருமான சண்முகநாதன் ஜெயந்தன் தலைமையில் சுழிபுரம், மூளாய், சித்தங்கேணி, அராலி மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் இந்த அஞ்சலிப்பு இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் மகளிர் அணித் தலைவி சு.ஜெயரஞ்சி, முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்களான உமாபதி, மோகன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம-125)

## அனைத்து உறவுகளுக்காக மனமுருகிப் பிரார்த்திப்போம்

### சைவமகாசபை அழைப்பு

மே 18ஆம் திகதி எம் தமிழ்த் தேசிய ஆன்மாவின் உச்சபட்ச வலி நிறைந்தநாள். இந்த வலி நிறைந்தநாளில், உயிர்நீத்த அத்தனை எம் உறவுகளுக்காகவும் திருக்கோவில்களில் மனமுருகிப் பிரார்த்திப்போம் . பிள்ளைகளுக்கு முள்ளிவாய்கால் கஞ்சியை ஒரு நேரமாவது உணவாகத் தருவோம் என உறுதிபூணுவோம் என்று அகில இலங்கை சைவ மகாசபை தெரிவித்துள்ளது. (ம-66)


## Vacancy for a Hindu Temple Priest



**Vacancy >a Hindu Temple Priest - Coventry, England**

Our Temple has been functioning for over 12 years and is now wanting a new Hindu priest familiar with Hindu Temple poojas mainly as observed and practiced in the main Temples in Sri Lanka. Main requirements are as follows:

1. Should have been educated 6-10 years in Gurukula institution,
2. Familiar in performing all temple rituals relevant to an occasion,
3. Able to recite appropriate Veda Aagama Mantras as relevant/necessary,
4. In good health and ideally married, though job is bachelor status,
5. Also ideally from a recognised priest lineage, kurukkal, age Late 20s to 50s,
6. Good knowledge of Tamil, Sanskrit. Spoken English+ additional south Indian language(s) will be a valuable asset,
7. The job details (Duties, benefits, salary etc.) to be discussed, at interview,

Please apply via email to cssvd65@gmail.com with all details please.

COVENTRY SHRI SIDHI VINAYAGAR DEVASTHANAM,
65A, GEORGE ELIOT ROAD, COVENTRY CV1 4HT

(CR 42459) A-1

## கோவில் குருக்கள் தேவை



**கோவில் குருக்கள் தேவை - கொவென்றி, இங்கிலாந்து**

12 வருடங்களாக இயங்கி வரும் எங்கள் கோவிலுக்கு ஒரு சைவ குருக்கள் தேவைப்படுகிறார். இவர் இலங்கைக் கோவில்களில் செய்யும் பூசைகள். செயல் வழிமுறைகளில் வல்லுநராக இருப்பது அத்தியாவசியம். மேலதிகமாக கீழுள்ள குறிப்புகளுக்கும் பொருந்தியவராக இருப்பது திறம்.

1. 6-10 வருடங்கள் குருகுல பாடசாலையில் அல்லது நல்ல குருக்களின் சிஷ்யராக கற்றிருக்க வேண்டும்.
2. விசேஷ தின சம்பவத்திற்குரிய கிரியைகளை செய்யும் வல்லமைகள் உடையவராக இருக்கவேண்டும்.
3. சகல விசேஷ தினங்களுக்கு உரிய வேத ஆகமங்களை ஓதும் வல்லமையும் அவசியம்.
4. நல்ல உடல் நிலையும், கல்யாணம் செய்திருப்பதும் திறம்,
5. 30-55 வரை வயசும், நல்ல குரு வம்சத்தவராகவும் இருப்பது உத்தமம்.
6. மொழிகளில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலப் பேச்சு, இன்னொரு தென்னிந்திய மொழி முதலிய வல்லமைகள் மிக உபயோகம்,
7. தொழில் விபரங்கள் பேட்டி கலந்துரையாடலில் தரப்படும்.


உங்கள் விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் படத்துடன் அனுப்பவும். cssvd65@gmail.com

**கொவென்றி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**
65A, GEORGE ELIOT ROAD, COVENTRY CV1 4HT

(CR 42458) A-1


## மரண அறிவித்தல்

மண்ணில்
15 . 03 . 1951



விண்ணில்
15 . 05 . 2024

### சின்னர் முத்துராசா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் 28/1 சோமசுந்தரம் அவனியூ சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் முத்துராசா 15.05.2024 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.அன்னார் காலஞ்சென்ற சின்னர்-கனகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னையா-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் அசோகமலரின் பாசமிகு கணவரும் பூபதி (ஜேர்மனி), திசைநாயகம் (ஜேர்மனி), சிவநேசன் (சுவிஸ்) காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவரத்தினம் சிவராசா, நாகேஸ்வரி (பிரான்ஸ்), புஸ்பமலர் சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சுகந்தினி சுதாசினி, சுதாகரன் (கனடா), சுதர்சினி சுகந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரலின் ஜெரிக்கோ, பாலகிரிதரன் (யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி), நிரோஜா, சங்கீதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாம், சாருஜா, ஷெகான், ஜெரோன், ஜெரூபன், சுவீட்டி, டிசான், பிளஸ்சியா, கெரினா (கனடா), ஆகியோரின் பேரனாருமாவர்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.05.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று வசந்தபுரம் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**
077 [illegible]

(CS 00509) V-1

## மரண அறிவித்தல்



### இராமுப்பிள்ளை சுகுணதீரன்

**(இளைப்பாறிய கணக்காளர், யாழ்.கல்வித் திணைக்களம், இளைப்பாறிய பிரதம கணக்காளர், வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு)**

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கோப்பாய், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சுகுணதீரன் அவர்கள் நேற்று (16.05.2024) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - தங்கமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற தம்பு - தங்கம் தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற வசந்தாதேவியின் அன்புக் கணவரும், கமலவேணி, ஞானவேணி, பாலவேணி, காலஞ்சென்ற ஞானதீரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனஞ்சயன், சுமங்கலி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி, கணேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விவேதன், தரணிகரன், பிரகேஷ், ஷோபினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை மறுதினம் (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி முதல் 11.000 மணி வரை மகிந்தபாலர், கல்கிசையில் வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணிக்கு ஈமக்கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 01.00 மணியளவில் கல்கிசை, தெகிவளை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
சு.தனஞ்சயன் (மகன்) 077 312 4123
த.இரவிந்திரராசா (மைத்துனர்) 077 133 1771

(CS 00510) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மன்னார் பேருந்துத் தரிப்பிடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளைத் தேடும் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ-56)




# விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 17

சாவகச்சேரியில் மோட்டார் சைக்கிள் மற்றும் இ.போ.ச. பஸ் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ், சாவகச்சேரி 305ஆம் கட்டைப் பகுதியில் திடீரென பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 51 வயதுடைய ஒருவரே காயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)

# முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி வழிமறிக்கப்பட்டு விசாரணை

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைக்கு நீதிகோரி முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியை தெல்லிப்பழைப் பொலிஸார் இடைமறித்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. கொக்குவிலில் இருந்து கீரிமலை நோக்கிப் பயணித்த நினைவு ஊர்தியே தெல்லிப்பழைப் பகுதியில் பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-66)

# ஐ.ம.சக்தியின் ஆட்சியில் மதுக்கடைக்கு மூடுவிழா

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் அனைத்து மதுபானசாலைகள் மற்றும் மதுபானக் கடைகளை மூடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுற்றுலாத்துறைக்கு மட்டும் விதிவிலக்குகள் வழங்கப்படும். நாங்கள் பாடசாலை மட்டத்திலிருந்தே ஒரு தற்காலிக இயக்கத்தைத் தொடங்குவோம். இந்த நாட்டின் குழந்தைகளைக் காப்பாற்ற இது செய்யப்படும்.

இதைச் சொன்னதற்காக நான் வாக்குகளை இழக்க நேரிடும் என்று எனக்குத் தெரியும், ஆனால் இது குழந்தைகளுக்காகச் செய்யப்படும். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தற்போது வழங்கப்பட்டுள்ள அனைத்து மதுபான உரிமங்களும் இரத்துச் செய்யப்படும் - என்றார். (எ-இ)

# கட்சியை விற்று நட்டஈடா? மைத்திரி மீது முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 17

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரச்சந்திர இந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபா இழப்பீடு செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் அந்தப் பணம் தன்னிடம் இல்லையென்றும் பகுதி பகுதியாகச் செலுத்த 10 வருடங்கள் காலவகாசம் தருமாறு மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் கோரியிருந்தார்.

இந்த நிலையில், கடந்த 13 ஆம் திகதி சுமார் 3 கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. திடீரென இந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




# உலக உணவுத் திட்டத்தின் முன்னேற்ற கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 17

உலக உணவுத் திட்டத்தின் 'பூட் போ அசஸ்ட்' செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அதில் ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜெரால்ட் ரெபெல்லி, உலக உணவுத் திட்ட அரசாங்கப் பங்குடைமை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத்திட்டப் பொறியியலாளர் டபிள்யூ.எ.சந்திரதிலக, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர், உடுவில், சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை ஆகிய ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள குளங்களைச் சிரமதானம் செய்யும் பொருண்மியம் நலிந்தவர்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கும் திட்டம் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-66)



மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டுத் துறை அமைச்சால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்ட செயலர் க.கன கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்டச் செயல கத்தில் வைத்து உபகரணங்களை வழங்கினார். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீ சியென் விலகினார்

சிங்கப்பூர், மே 17

சிங்கப்பூரில் நீண்டகாலம் பிரதமராக இருந்த லீ சியென் லூங் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். 20 ஆண்டு காலம் பிரதமராக இருந்த அவரின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது.

சிங்கப்பூரின் துணைப் பிரதமரும், நிதியமைச்சருமான லாரன்ஸ் வோங் நேற்று இரவு லீயிடம் இருந்து முறைப்படி ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளார்.

1965ஆம் ஆண்டு சுதந்திர நாடாக மாறியதில் இருந்து சிங்கப்பூரில் மூன்று பிரதமர்கள் மட்டுமே ஆட்சிசெய்துள்ளனர். அவர்கள் அனைவரும் ஆளும் மக்கள் செயல் கட்சியைச் சேர்ந்தவர்கள். தற்போது லீ சியென் லூங் பதவி விலகியமையானது சிங்கப்பூர் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சிலர் அவர் பதவியில் தொடரவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். எனினும், அவர் அமைச்சரவையில் மூத்த உறுப்பினராகச் செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அரசாங்கத்திலிருந்து வெளியேறத் தயார்



## மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, மே 17

அரசில் அங்கம் வகித்தாலும் கட்சியின் சுயாதீனத்தன்மையைக் காட்டிக்கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. அரசிலிருந்து வெளியேறுவதற்குக்கூடத் தயாராகவே இருக்கின்றோம் என்று பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மஹிந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**கேள்வி** - ஜனாதிபதித் தேர்தலையா அல்லது பொதுத்தேர்தலையா நீங்கள் கோருகின்றீர்கள்?

**பதில்** எதற்கும் நாம் தயார். பொதுத்தேர்தலை வழங்கினால் அதற்குத் தயார். ஜனாதிபதித் தேர்தல் வைக்கப்படுமானால் அதற்கும் தயார். எனவே, இதில் எமக்குப் பிரச்சினை கிடையாது. இரண்டுக்கும் தயாராகவே இருக்கின்றோம்.

**கேள்வி** - தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதை கண்டித்துள்ளீர்களே?

**பதில்** ஆம், நான் மட்டுமல்ல எமது கட்சியில் உள்ள 95 வீதமானோர் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளனர்.

**கேள்வி** - அப்படியானால் இது விடயம் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கையை அனுமதிக்கவில்லையா?

**பதில்** அனுமதிக்கவில்லை.

**கேள்வி** - நீங்களும் அரசில் தானே இருக்கின்றீர்கள்?

**பதில்** எமக்கு சுயாதீன உரிமை உள்ளது. அரசில் அங்கம் வகித்தாலும் அந்த சுயாதீன உரிமையைக் காட்டிக்கொடுக்கவில்லை.

**கேள்வி** நீங்கள் விரும்பாத விடயங்கள் இடம்பெற்றால் அரசில் இருந்து விலகவும் தயாரா?

**பதில்** நாட்டுக்காக எதற்கும் நாம் தயார். இவ்வாறாக மஹிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

பிரத்தியேக/ குழு வகுப்புக்கள்
ICT
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
Tamil & English Medium
நேரடி வகுப்புக்கள் மற்றும் ZOOm இன் ஊடான
இணையவழி வகுப்புக்கள்
ஆரம்பம்: 19.05.2024
மாணவர்களுக்கான நன்மைகள்
➤ குளிரூட்டப்பட்ட விரிவுரை மண்டபம்
➤ வார/ வார இறுதி நாள்வகுப்புக்கள்
➤ Practical/ Tutorial Classes
➤ அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
IPS
Thirunelvely, Jaffna
076 685 2529

# நீதியின் கட்டமைப்புக்கு பங்காற்றியவராம் ரணில்

## விஜயதாஸ புகழாரம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையின் முன்னேற்றத்துக்காக செய்யவேண்டிய அனைத்தையும் செய்து நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியவர் -இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஒரு நாட்டுக்கு நீதித்துறை மிகவும் முக்கியமானது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள் தவிக்கும் நேரத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இருக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். அத்துடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஒரு நாடு முன்னேறமுடியாது. கடந்த இரண்டு வருடங்களில் எமது நாட்டில் சட்டத்தின் ஆட்சி புத்துயிர் பெற்றுள்ளது - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்



**திருமதி இம்மனுவேல் இசபெல்லா (சொற்கேளான் இராசகிளி)**

யாழ்ப்பாணம் பாசையூரைப் பிறப்பிடமாகவும், பாசையூர் இல,12 2ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இம்மனுவேல் இசபெல்லா (சொற்கேளான் இராசகிளி) கடந்த (13.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைத்துரை (குழல் ஆசைத்துரை) றோஸ்மலர் தம்பதியரின் அன்பு மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் (பொன்னானம்) இராசமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஞானப்பிரகாசம் இம்மனுவேலின் (சொற்கேளான்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் சகோதரியும் மற்றும் பவுண், கிளி (பிரான்ஸ்), பாலதாஸ் (பிரான்ஸ்), குகதாஸ் (டென்மார்க்), றோசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மகோன்துரை, சறோசா, பேடினன் (பிரான்ஸ்), சறோ (பிரான்ஸ்), அன்ரன் (பிரான்ஸ்), கலா (டென்மார்க்) ஆகியோரின் அருமை மைத்துனியும் மதிவதனி றாஜமகான் செல்வமகான் (பட்டு), துரைமகான், சோபிதவதனி எழில்வதனி, ஜெயமகான் சுந்தரவதனி வானதி, மிதுன், றொனே, றொமான் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் மகிந்தா, காலஞ்சென்ற மேகலா மற்றும் இனிக்கா, மகிதரன், மதுமிதன், சன்றா சமித்தா, சரோன், யூட், மருண்சிங் ஆகியோரின் பாசமிகு பெரியத்தையும், காயத்திரி, ராஜ்யா, கேசரன், பிரகீர்த்தி, ஆரணவர்மன், லிசி, பிரசன்னா, ஆர்மதி, சிறிமாறன், தேசிகன், தனஞ்சயா, தனமித்திரா, மகிஷா, டிறோன், டியூறா, றிச்சிக்கா, றெகான், ப்ரனிஷ்கா, தர்ஷிகா, தர்ஷன், அற்புதராஜ் மக்சோண்ஸ், ஈசாக் ஆகியோரின் அன்பு நிறை பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.05.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல 12, 2ஆம் குறுக்குத்தெரு என்னும் விலாசத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு கொண்டுவரப்பட்டு நிறைவில் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்பு: 0771140576 மகள்- மதிவதனி
0760177518 மகன்- செல்வமகான் (பட்டு)
0766518238 மருமகன்- மகிதரன்

தகவல்: குடும்பத்தினர்

# சஜித் - அநுர விவாதித்தால் தேசிய விடுமுறை அறிவிப்பு

## அமைச்சர் ஹரின் நக்கல்

கொழும்பு, மே 17

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்துக்கும், ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமாரவுக்கும் இடையில் விவாதம் நடைபெற்றால், அதைத் தேசிய விடுமுறை தினமாக அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் விவாதம் நடத்தப்படும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இருவருமே பின்வாங்கி வருகின்றனர். காதலில் ஈடுபடுபவர்கள் போல கடிதங்களை பரிமாறிக்கொள்கின்றனர்.

இருவரும் நாட்டை பொறுப்பேற்கும் சவாலை ஏற்காதவர்கள், இவர்களின் திட்டம் என்னவென்பதை அறிய நாட்டு மக்கள் ஆவலாக உள்ளனர். எனவே, விவாதம் நடத்தப்படும் நாளை விடுமுறை தினமாக அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன். அனைவரும் அந்த விவாதத்தைப் பார்க்கவேண்டும்' - என்றார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார், இதனை அவர் என்னிடம் உறுதிப்படுத்தியுள்ளார். உரிய நேரத்தில், உரிய வகையில் அறிவிப்பு வெளியாகும் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

சேனையூர் பிள்ளையார் கோவிலில் வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியமைக்காக கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசேட நகர்த்தல் பத்திரம் மூலம் மூதூர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் தொடர்பான வாதங்கள் மற்றும் சமர்ப்பணங்களைக் கேட்ட நீதிமன்றம், முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியை வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை நீக்குவதாக அறிவித்துள்ளது.

எனினும் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழேயே முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கியவர்கள் கைது செய்யப்பட்டமையால் நேற்று அவர்களுக்கான பிணை வழங்கப்படவில்லை.

சட்டத்தரணி க. சுகாஷ் பிரதிவாதிகளுக்காக மன்றில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-50)

## மே 20...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கைக்கு தெற்கே வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது தீவிரமடைந்துள்ளது. இதனால் 18 ஆம், 19ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும். அதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் கிழக்கு வங்காள விரிகுடாவில் மேலுமொரு காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாக வாய்ப்புள்ளது. இதனை எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னரே உறுதிப்படுத்தமுடியும். பின்னர் மீண்டும் வெப்பநிலை அதிகரிக்கும் - என்றார். (அ-ச-555-66)

## ஜுலை...

தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அகழ்வாய்வுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஜுலை மாதம் 4ஆம் திகதிமுதல் மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளன.

**பின்னணி**

கடந்த 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தை அகழ்ந்தபோது, மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது. இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் அந்த மனிதப்புதைகுழியில் இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது குறித்த மனிதப்புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகளும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடையப் பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இரண்டாம்கட்ட அகழ்வாய்வுப்பணிகளின் போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கான் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. இதன்போது, கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தன. எனினும் நிதிப்பற்றாக்குறையால் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. (அ-ம)

## தமிழரசின்...

ஜுலி சங். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், புளொட் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான விடயங்களையும், அபிப்பிராயங்களையும் அமெரிக்கத் தூதர், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டறிந்து கொண்டார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குத் தடை விதித்தல், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியோரைக் கைதுசெய்தல் போன்ற மனிதாபிமானமற்ற செயல்களில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருவதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கத் தூதருக்குச் சுட்டிக்காட்டினார்கள்.

அதன்பின்னர் அவர்களிடம் கருத்துப் பரிமாறிய அமெரிக்கத் தூதர், "இந்தச் சமயத்தில் தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். ஆனால், அதற்கு மாறாக கட்சிகள் பிளவுற்று வருகின்றன. குறிப்பாக தமிழ் மக்களின் மிகப்பெரிய கட்சியான தமிழரசுக் கட்சி, உள்கட்சி பதவி மோதல்களால் இப்போது வழக்குகளை எதிர்கொண்டுள்ளது. இதனால் அந்தக் கட்சி மக்களுக்காக ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கவேண்டிய நேரத்தில் இப்படி பிளவுபட்டிருப்பது வேதனையளிக்கிறது. அதேவேளை நினைவேந்தல்களுக்குத் தடை விதித்தமை, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியோரைக் கைதுசெய்தமை குறித்து எனது கருத்தை வெளிப்படையாக ருவிற்றரில் பதிவு செய்துவிட்டேன்" என்று தெரிவித்தார். (அ-ம)

## ஒக்ரோபர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும். நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான காலஎல்லை இன்னும் வரவில்லை. ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பது உறுதி. ஒக்ரோபர் முதல் வாரம் அல்லது இரண்டாம் வாரத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரிக்கை விடுக்கும் அதிகாரம் உறுப்பினர்களுக்கு இருந்தாலும், முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. எனவே, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேவையற்ற பிரச்சினைக்கு அவர் வழியேற்படுத்தமாட்டார். ஆளுங்கட்சியில் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலையே முதலில் கோருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியுடன் மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சலூன் கதவும் திறந்தே உள்ளது" - என்றார். (அ-ம-44)

## வடக்குக்கு...

விழாவைத் தொடர்ந்து காணிப் பத்திரம் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் அவர் பயணப்படவுள்ளார். அங்கும் ஜனாதிபதி பல்வேறு சந்திப்புகளிலும் பேச்சுகளிலும் ஈடுபடவுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக வடக்குக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றார். ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்தே அவர் காய்நகர்த்தி வருகின்றார் என்று விமர்சிக்கப்படும் நிலையில் ரணிலின் மேமாதம் பயணம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே அமைந்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் பரிசீலித்துவரும் பின்னணியிலும் ரணிலின் இந்தப் பயணம் கவனக்குவிப்பைப் பெற்றுள்ளது. (அ-ம-26)

## பரீட்சை...

மரநடுகையிலும் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட செல்வாநகர் அ.த.க.பாடசாலை மற்றும் கோணாவில் மகா வித்தியாலயத்திலேயே இந்த உணர்ச்சிபூர்வமானதும் முன்மாதிரியானதுமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

பெரும்பாலும் பரீட்சை நிறைவுநாளில் மாணவர்கள் தங்கள் ஆடைகளில் சாயங்களைப் பூசி, பாடசாலைச் சொத்துகளுக்கு சேதங்களை விளைவித்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துவரும் இந்தக் காலத்தில், மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் மரநடுகையிலும், துப்புரவுப் பணியிலும் ஈடுபட்ட மாணவர்களுக்கு சமூக வலைத்தளங்களில் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். (அ-ம-214-159)

## இளம்...

யிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தாவடியைச் சேர்ந்த சி.ஜென்சியா (வயது-31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரவு உணவருந்திவிட்டு படுக்கைக்குச் சென்ற வீட்டார், காலையில் தூக்கத்திலிருந்து எழுந்து பார்த்தபோது அந்தப் பெண் மயக்கமுற்ற நிலையில் இருந்துள்ளார். இதையடுத்து அவரை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த குடும்பப் பெண்ணுக்கு ஒரு குழந்தை என்றும், அந்தக் குழந்தையும் ஜென்சிகாவின் கணவரும் பிரான்ஸில் வசித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## பொதுத்தேர்தலே...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜுன் 16 ஆம் திகதிக்குப் பின்னர் நிச்சயம் நாடாளுமன்றம் கலைக்கப்படும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலே நடத்தப்படும் என்பதை உறுதிபடத் தெரிவிக்கிறோம். ரஷ்ய 'கே.ஜி.பி.' என்ற உளவு அமைப்புடன் எனக்குத் தொடர்பு இருப்பதால் எல்லா விடயங்களும் முன்கூட்டியே தெரியவரும். அதேவேளை, ரஷ்யப் போருக்கு கூலிப்படைக்கு ஆட்கடத்தும் பிரதான சூத்திரதாரி உதயங்க வீரதுங்க என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறேன். ரஷ்யா சென்றுள்ள தரப்பினரை நாட்டுக்கு அழைத்துவரக்கூடிய ஆளுமை எனக்குள்ளது - என்றார். (அ-ச-44)

## பெண் கொலை...

செய்யப்பட்ட சம்பவத்தில் பெண்ணின் கணவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்து மருதங்கேணி பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்தனர்.

உடுத்துறை வடக்கு தாளையடி பகுதியில் கடந்த 10ஆம் திகதி பெண் ஒருவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டிருந்தார். உயிரிழந்த பெண் துஷ்பிரயோகத்துட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவனுக்கும் அடிக்கடி முரண்பாடு ஏற்படுவது தெரியவந்ததையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் பெண்ணின் கணவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ச-26)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில்
31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

(CS/488) J-1

தொடர்பு :- 077 886 2927

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை,
யாழ்ப்பாணம்.

A/L 2026

தொழில்நுட்பப் பிரிவு

- ஆரம்பம் - 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை 8.30

A/L 2024, 2025
வகுப்புகள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: 077 017 5346

(in.21023) (H-1)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 23.02.1957 | மறைவு 30.04.2024

கடந்த 30.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப விளக்கு

**சுசீலாதேவி தில்லைராஜன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.
075 745 1188

(CS/55039) J-1

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
2026 A/L
பௌதிகவியல்
English, தமிழ் மூலம்
M.Karunanithy B.Sc (Hons) PGDE
அனுமதிகள் NEW SCIENCE Hall இல்
ஆரம்பம்: 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை
12.00 மணி

## NEC

யாழ் நகர்
A/L-2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம்
MAY 19
ஞாயிறு காலை 09.00 மணி

மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

அலுவலக தொடர்பு: 076 535 0999

## DMI Jaffna

நாளை ஆரம்பம்
A/L - 2026
கலை | வர்த்தகம்
காலை: 9.00 மணி
DMI Jaffna 077 848 0604

## உயிரியல்

தமிழ் / English மொழி மூலம்
தனியார், குழு வகுப்புக்கள்.
நேரடி வகுப்புக்கள் - Science College - Jaffna இல் நடைபெறும்.
அனுமதி - Science Hall - Jaffna இல்
தயா.ராகவன் BSc

(CS/498) J-1

077 929 9023

## A/L தொழினுட்பப்பிரிவு

smart thinking leads to innovate

## Techna
Technical Institute

புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு | P.நிறோஜனன்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி

பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்

| | |
|---|---|
| ICT | கணிதம் |
| T.லவன் | T.சசிகரன் |
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| S.சஜீபன் | S.P கரன் |

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549


# பிளேஓவ் சுற்றில் ஹைதராபாத்!

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெறவிருந்த ஹைதராபாத் மற்றும் குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழையால்கைவிடப்பட்டதைத்தொடர்ந்துஹைதராபாத்அணி பிளேஓவ் சுற்றுக்குள் நுழைந்தது. மழையால் பகிர்ந்து வழங்கப்பட்ட தலா ஒரு புள்ளியைப் பெற்றுக் கொண்டதை யடுத்தே ஹைதராபாத் முன்னேற்றம் கண்டது.

இதுவரையில் ராஜஸ்தான், குஜராத், ஹைதராபாத் அணிகள் பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன. எஞ்சியுள்ள இடத்துக்கு சென்னை, பெங்களூர் அணிகள் மோதவுள்ளன. (ம)

## இலங்கை...

எல்லைதாண்டி கடலட்டை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காரைக்கால் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-27)

## உதயனில்...

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இந்தக் குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆர்வலர்கள் முகாமில் கலந்து கொள்ளமுடியும். (அ-ம)


வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684


## ஆயுத...

தற்போது இந்தியாவில் இடம்பெற்று வரும் கூட்டு இராணுவப் பயிற்சியின்போது இந்திய ஊடகங்களுக்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- இந்தியாவுடன் இணைந்து ஆயுதத் தொழிற்சாலையை இலங்கையில் அமைக்க பேச்சுகள் இடம் பெற்றுவருகின்றன. இந்த தொழிற்சாலை ஒரு கூட்டுத் தயாரிப்பாக அமையும். கடந்த மாதம் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா இராணுவ உபகரண தொழில்நுட்பங்களை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ள இந்தியா விரும்புகிறது எனத் தெரிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (ச-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.